திருமறைநூல் நாடக வரிசை 11

# செங்கடல்



3451
105168
JPL
C3451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
19-10-1994
யாழ்ப்பாணம்

# செங்கடல்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

JPL KOHA

எழுதியவர்
இன்பராஜன்

345 CC

General Editor:
**Rev. Prof. N. M. SAVERI**

105168

நாடகப் பிரதியாக்கப்பகுதி
திருமறைக்கலாமன்றம்

முகப்பு, உள்படங்கள்: எஸ். டி. சாமி
வடிவமைப்பு: செல்வி க. இராமச்சந்திரன்

ISBN 955 - 9262 - 03 - 3

105168
e-c

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8112

# CENTRE FOR PERFOMING ARTS

## திருமறைக்கலாமன்றம்

### திருமறைநூல் நாடக வரிசை

# செங்கடல்

**(யாத்திராகமம்)**

*திருமறைநூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல்மொழி மக்களும் படித்து இன்புறும் தகமைவாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான, ஆணித்தரமான, சிந்தனைகளைத் தூண்டும் அமுத ஊற்றாகவும் அது விளங்குகிறது.*

*இத்தகைய தலைசிறந்த இலக்கியத்தை நாடக வரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்கவேண்டும் என்ற நல்லெண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறை நூலையும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற அக்கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.*

*திருமறைநூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக்கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினை தமிழ் கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.*

பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்
இயக்குனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சூசையின் காலத்தில், எகிப்தில் செல்வச்செழிப்புடன் வாழ்ந்த இஸ்ராயேலர்கள் புதிய அரசியல் தலைமையேற்ற பாரவோனின் வழிவந்த புதிய பாரவோன் இஸ்ராயேல் மக்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டபோது இஸ்ராயேலர்கள் மிகவும் துன்புற்றார்கள். பாரவோன் அரண்மனையில் சுதந்திர மனிதனாக வாழ்ந்த மோயீசனின் இதயத்தில் தன் மக்கள்படும் துயரம் முள்ளாகக் குத்தியது. அரண்மனையில் வாழ்ந்தாலும் தனது இனத்திற்கு இடுக்கண் வந்துற்றபோது வாழாதிருக்கமுடியவில்லை. எபிரேயன் ஒருவனை மிகவும் கடுமையாக வேலைவாங்கிய எகிப்தியன் அவனை அடித்தபோது, எகிப்தியனைக் கொன்று புதைத்துவிட்டு, பாரவோனுக்கு பயந்து மதியான் நாட்டிற்குத் தப்பி ஓடினான் மோயீசன். எகிப்திலிருந்து மதியான் நாட்டிற்குத் தப்பியோடிய மோயீசனை கடவுள் ஓய்ந்திருக்க விடவில்லை. எகிப்திலிருந்து இஸ்ராயேலர்களை மீட்கும் பணியில் தலைமைப் பொறுப்பை மோயீசனிடம் கொடுத்தார். அன்றிலிருந்து தொடர்ந்ததே இந்த விடுதலைப் பயணம். பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டை வழங்குவதாக கடவுள் கொடுத்த வாக்கையும், மோயீசனோடு கடவுள் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் இந்த வரலாறு விளக்குகிறது.

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் – ஒன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105168
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

இடம்: அரண்மனை

பாத்திரங்கள்: பாரவோன், அமைச்சர், காவலாளி, பூவாள், செவொறாள்

பாரவோன்: *அமைச்சரே! எனது இதயத்தின் அடித்தளத்தில் இனம்புரியாத ஓர் அச்சம் வருடிக் கொண்டிருக் கிறது. எகிப்து எமது தாய் நாடு. அதன் புதல்வர்கள் எகிப்தியர்கள். என்றும் பெருமைக்குரியவர்கள். ஆனால் . . .*

அமைச்சர்: *மன்னவரே! என்ன ஆனால் . . .*

பாரவோன்: *வரத்து வெள்ளம் நின்ற வெள்ளத்தை அடித்துச் செல்வதுபோல், பட்டினிச்சாவுக்குப் பயந்து எமது நாட்டிற்குள் தஞ்சம் புகுந்த எபிரேயர்கள் எமது மக்களை விட வலிமையுடன் பல்கிப் பெருகியுள்ளார்கள். இவர்கள் அச்சத்துக் குரியவர்கள். ஆபத்தானவர்கள். அதனால் இவர்கள் பல்கிப் பெருகாதபடி இவர்களைத் தந்திரமாக வதைக்க வேண்டும்.*

அமைச்சர்: *ஆகட்டும் அரசே! ஆனால், தங்கள் அச்சத்துக்குரிய காரணம் புரியாத புதிராக இருக்கிறது.*

பாரவோன்: *புரியவில்லை? புதிர் போடுகிறீர். என்ன இருந்தாலும் இவர்கள் எகிப்திய மண்ணுக்கு அந்நியர்கள். செஞ்சோற்றுக் கடனுக்கு நன்றியுடையவர்களா என்பதும் சந்தேகத்துக்குரியது. வேற்று நாட்டுப் பகைவர்கள் எமது நாட்டின் மீது படையெடுக்கும் போது, எபிரேயர்கள் நம் பகைவர்களோடு சேர்ந்து எம்மைத் தோற்கடித்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிடுவார்கள்.*

அமைச்சர்: *அதனால் ஆற்றலும், அறிவும், வலிமையும் கொண்ட எபிரேயர்களின் கடுமையான உழைப்பு எமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சம். அப்படித்தானே அரசே?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவோன்: ஆமாம், அமைச்சரே! அதைத்தடுக்க, அவர்கள் என்றும் எமக்கு அடிமைகளாகச் சேவைசெய்ய அவர்களைப் பணிக்க வேண்டும், வதைக்க வேண்டும். என்ன சொல்கிறீர்?

அமைச்சர்: மன்னவா, கலக்கம் எதற்கு? கருமம் நடக்கிறது.

பாரவோன்: என்ன?

அமைச்சர்: சுமை சுமக்கும் பொதி எருதுகளாக, கடினவேலை வாங்கி வருத்தும் படி, கொடுமையாக வேலைவாங்கும் அதிகாரியை நியமித்துள்ளதைத் தாங்கள் மறந்து விட்டீர்களா?

பாரவோன்: மறக்கவில்லை; மனது சலிக்கிறது.

அமைச்சர்: எதற்கு?

பாரவோன்: முன்பைவிட அவர்கள் பட்டி ஆடுகள் போல் பொலிந்து பெருகுவதைப் பார்த்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.

அமைச்சர்: கலக்கம் வேண்டாம் மன்னவா.. மாபெரும் களஞ்சியசாலைகளாகிய பீட்டோவையும், இராம்சேயையும் அவர்களை வருத்திக் கட்டுவித்தோம். சாந்தும், செங்கல்லும் மண்ணும், களிமண்ணும் சுமக்கச் செய்தோம். அதனால் அவர்கள் விரக்தியின் விளிம்பிற்கே வந்து விட்டார்கள்.

பாரவோன்: மறுக்கவில்லை. அவர்களின் எதிர்கால சந்ததிகளின் சுவடுகளே இல்லாதபடிக்கான . . .

அமைச்சர்: திட்டத்தைத் தீட்ட வேண்டியதுதானே.

பாரவோன்: அமைச்சரே! அருகே வாரும்; காதைக் கொடும்.

அமைச்சரின் காதுக்குள் அரசன் இரகசியமாகப் பேசுவது போல் பாவனை.

அமைச்சர்: மன்னவா! அருமையான திட்டம். இத்திட்டம் அவர்களை வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் செய்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன்: யாரங்கே!

காவலாளி வந்து வணங்கி நிற்றல்

எபிரேயர்களுக்குள் மருத்துவம் பார்க்கும் செவொறாளையும், பூவாளையும் அழைத்து வரச்சொல்.

காவலாளி: ஆகட்டும் அரசே! ( வணங்கிச் செல்லல்)

பாரவோன்: அமைச்சரே!

அமைச்சர்: மன்னவரே!

பாரவோன்: இந்த மருத்துவப் பெண்கள் இராஜவிசுவாசம் உள்ளவர்களா? இவர்களை நம்பலாமா? அல்லது நமது திட்டத்தை அம்பலமாக்கி கருமத்தைக் கெடுத்துவிடுவார்களா?

அமைச்சர்: மன்னவரே! அவர்கள் தங்கள் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். எவரையுமே சந்தேகிக்க வேண்டும் என்றாலும் சிலரையேனும் நம்பித்தான் ஆகவேண்டும். செவொறாளும் பூவாளும் மனச்சுத்தம் உள்ளவர்கள்.

காவலாளி உள்ளே வந்து வணங்கி நிற்க
செவொறாளும் பூவாளும் வணங்கி நிற்றல்.

பாரவோன்: பெண்மணிகளே! நீங்கள் இந்த நாட்டின் கண்மணிகள். கண்ணியமானவர்கள். கடமை உணர்வு உள்ளவர்கள். நாட்டிற்கும், நாட்டை ஆளும் எனக்கும் விசுவாசமானவர்கள் என்பதை நான் அறிவேன். உங்களால் இந்த நாட்டிற்கு நன்மையான கருமம் நடந்தாக வேண்டும்.

பூவாள்: முடிவேந்தே! நாட்டுக்கு நன்மையெனில் எமது கண்களை வேண்டுமானாலும் தருகிறோம்.

பாரவோன்: மெச்சுகிறேன்! உங்கள் நாட்டுப் பற்றை. எமக்கு வேண்டியது உங்கள் கண்கள் அல்ல. கருத்தான செயற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவொறாள்: அரசே, நாம் என்ன செய்ய வேண்டும்?

பாரவோன்: எபிரேயப்பெண்களின் பேறுகாலத்தின்போது மருத்துவம் பார்க்கையில் ஆண்பிள்ளையானால் கொன்றுவிடுங்கள். பெண்பிள்ளை என்றால் காப்பாற்றுங்கள். இது எனது கட்டளை.

இருவரும் அதிர்ச்சியடைதல்

பூவாள்: மன்னவரே!

பாரவோன்: கட்டளை பிறந்ததும் கலக்கம் என்ன?

செவொறாள்: கலக்கம் இல்லை மன்னா. ஆனந்தக் கலக்கம்.

பாரவோன்: அது எதற்கு?

செவொறாள்: தங்களுக்கும் தாய்த்திருநாட்டிக்கும் நலம்புரியக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பத்துக்காக.

பாரவோன்: மிக்க மகிழ்ச்சி! மருத்துவ மணிகளே! கருமம் வெற்றிகரமாகக் கைகூடினால் கைநிறையச் சன்மானம்.

செவொறாள்: நாட்டுக்கு நலம் புரியச் சன்மானமா மன்னவா? கலங்கவேண்டாம் கருமத்தை முடிக்கிறோம்.

அரண்மனையில் உள்ள எல்லோரும் அசையாத நிலையில் நிற்க செவொறாளும் பூவாளும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மென் அசைவில் செல்லும் பொழுது அவர்களைப் பற்றிய சிறு உரையை ஒரு பெண் குரலில் உரைக்க வேண்டும்.

பெண்குரல்: பூவாள் இது என்ன கொடுமை. இடியுண்ட மரம்போல் எனது இதயம் இடியுண்ட உணர்வு. கண்ணை இமை காப்பதுபோல் மனித ஜனனத்தை பிறப்பிக்க உதவும் நாம், ஒரு காலையில் தளிர்த்த மென்தளிரைவிடவும் மென்மையான சிசுவைக் கிள்ளிவிடச் சொல்கிறாரே மன்னவர். உனக்கு மட்டுமென்ன செவொறாள் என் உடலே அச்சத்தில் உறைந்தது போலிருந்தது. எங்கள் தொழில் ஜனனத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பதன்றி மரணத்தைப் பிறப்பித்தல் அல்ல. கடவுள் கண்ணில் எங்களுக்குக் கருணை கிடைக்கும் பொருட்டு, இந்தப் பழியான கருமத்தில் எங்கள் கைகளை நாங்கள் களங்கப்படுத்தலாகாது. அரசருக்கு ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தப்புவோம்.

இருவரும் மேடையைவிட்டு மறைந்தபின் அரசன் பேசுதல்.

பாரவோன்: அமைச்சரே!

அமைச்சர்: மன்னவரே!

பாரவோன்: நான் எப்பவுமே, எதையுமே. . .

அமைச்சர்: சந்தேகிப்பவர் என்று எனக்குத் தெரியாதா என்ன? சந்தேகம் எதற்கு மன்னவா?

பாரவோன்: எப்பவுமே இரண்டு அம்புகளையாவது வைத்திருக்க வேண்டும். ஓர் அம்பு தற்செயலாகக் குறித்தவறினால் அடுத்த அம்பை விட வேண்டும்.

அமைச்சர்: அப்படியாயின்?

பாரவோன்: மருத்துவப் பெண்களால் எபிரேயப் பெண்களின் குழந்தைகளைக் கொல்லமுடியாது போய்விடின், அவர்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகளை ஆற்றில் எறிந்துவிடும்படியும், பெண் குழந்தைகளானால் காப்பாற்றும்படியும் அரசர் ஆணையிட்டுள்ளார் என்று மக்களுக்கு அறிவியும்.


அமைச்சர்: அரசனும் நீரே! அதிகாரமும் உமதே! ஆணை பிறப்பிப்பதும் தாங்களே! பரமரகசியமாக நடக்காத கருமத்தை பகிரங்கமாக நடத்திக் காட்டக் கூடிய வலிமையும் உமக்கே. . . ஆகட்டும் மன்னவா.

திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – இரண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இடம்: | ஆற்றங்கரை, நாணல் சூழ்மி நிற்கும் காட்சி |
| பாத்திரங்கள்: | சிறுமி, இளவரசி, தோழி, தோழி 2, தாய் |

இக்காட்சியை மேடையில் காட்டாமல் மேடைக்கு வெளியே இருப்பதாகக் காட்டவேண்டும். குழந்தை மோயீசனின் சகோதரி சிறுமி அதைக்கூடையில் எடுத்து ஆற்றில் விட்டுவிட்டு வந்து மேடையில் நின்று தூரத்தே பேழையைப் பார்க்கிறாள்.

சிறுமி: *(கண்கள் கலங்க, விம்மி விம்மி) எபிரேய குலக் கொழுந்துகளாகிய குழந்தைகளை தெப்பங்களாகச் சுமக்கும் எகிப்தின் நைல் நதியே, பாரவோனின் பாவத்தை நீயா சுமக்கவேண்டும்? தம்பி! தம்பி! என் அன்புத்தம்பி! உன்னை நாணல் பேழையில், நதியில் மிதக்கவிட்டு நான் எப்படி மனம் ஆறுவேன். என் வயிறு எரிகிறதே. நெஞ்சு துடிக்கிறதே (திரும்பிப் பார்த்து) ஆ! அரசி. . . தோழியர்கள் தம்பிக்கு ஏதும் ஆபத்து . . மறைந்திருந்து என்ன நடக்கிறது என்று பார்ப்போம்*

சிறுமி மறைய மேடையில் மறுகரையால் பாரவோனின் புதல்வி தோழியரோடு வருதல்.

இளவரசி: *ஆ! என்ன அழகு, என்ன அற்புதம்! எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காமல் விளங்க வந்துதித்த நைல்நதியே, செழுமைத் தாயே! உன்னை வாழ்த்துகிறேன்.*

தோழி 1: *இளவரசி! இனம் புரியாத இன்பத்தை இதயத்தில் ஊற்றெடுக்கச் செய்யும் இந்த வளம் நிறைந்த கடற்கரையின், நெஞ்சைக் கிள்ளும் அழகை எவ்வாறு வர்ணிப்பது! இங்கு எமக்கொரு கூடாரம் அடித்திருந்தால் சொர்க்கசுகம் தானே வரும். . .*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி 2: எங்கும் பளிச்சென்று, எதிலும் ஜில் என்று கண்ணைப் பறிக்கின்ற கருத்தை இழக்கின்ற இந்த இடத்திற்கு செக்கச் சிவந்த அந்திவானம், மங்கல அணிகலம் போல் அழகைச் சிந்தியிருக்கிறதே.!

இளவரசி: அமுதக் கலசத்தை சுவைத்தது போல்; அப்படித்தானே?

திடீரென்று தூரத்தே உற்றுப்பார்த்து

ஆ! என்ன அது?

தோழி 1: என்ன இளவரசி!

இளவரசி: கோரைப் புல்லுக்குள் ஒரு சின்னப் பேழை! அதை சீக்கிரம் எடுத்துவா.

தோழி ஓடிச்சென்று பேழையை எடுத்து வருகிறாள்

என்ன ஆச்சரியப்படுகிறாய்! என்ன அது? இங்கே கொண்டுவா.

தோழி 1: குழந்தை இளவரசி!

இளவரசி: கொடு இப்படி! அப்பப்பா என்ன அழகு! அருமையான ஆண்குழந்தை. எந்த இதயமற்றவள் இந்த ஈனச் செயலை செய்தாள்? அவளை. . .

தோழி 2: இது எபிரேயக் குழந்தை. . . .

இளவரசி: எபிரேயக் குழந்தை என்றால் என்ன? குழந்தை அது எல்லோருக்கும் சொந்தம். இந்தப் புன்னகைக்கு எந்தப் பொன்னகையை ஒப்பிடுவேன்? நான் ஒரு பாலூட்டும் தாயாக இருந்திருந்தால் என் அமுதப்பாலை இந்த தெய்வக் குழந்தைக்கு ஊட்டி மகிழ்ந்திருப்பேன்.

தோழி 1: இளவரசி! கட்டழகுக் கன்னியான தங்களுக்குள் திடுமென தாய்மை உணர்வு எப்படி நுழைந்தது?

தோழி 2: என்ன வேடிக்கையான பேச்சு? கன்னிமைக்குள் ஒளிந்து கிடப்பது தாய்மைதானே! இது போகப் போகப்புரியும். . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

மூவரும் சிரித்தல்

இளவரசி: அநுசரி! கன்னியின் இதயத்தில் தாய்மை பூத்துவிட்டது. இது இனி எவளோ ஒருத்தியின் எபிரேயக் குழந்தையல்ல. எகிப்திய மாமன்னர் பாரவோனின் தவப்புதல்வியின் இதயபுத்திரன்.

தோழி 1: அது எப்படி சாத்தியமாகும்? இந்தக் குழந்தை எகிப்தியரின் ஜென்ம விரோதி.

தோழி 2: யார் சொன்னது?

தோழி 1: தங்கள் அப்பா! பாரவோன்.

இளவரசி: இது இதயமற்ற சிந்தனை.

தோழி 2: அதனால்தான் தங்கள் தந்தையார் எபிரேயரின் குழந்தைகளை ஆற்றில் வீசிவிடும்படி கட்டளை இட்டார்.

இளவரசி: இது எவ்வளவு பாவம். என் தந்தையின் பாவத்திற்கு நான் பிராயச் சித்தம் செய்யவேண்டுமானால் இந்தக் குழந்தை என் சுவீகாரப் புத்திரனாக வேண்டும். இது எனது இலட்சியம். இதயக் கனவு!

தோழி 1: கனவை நனவாக்க வேண்டுமே. குழந்தைக்குப் பால் வேண்டும். யாரிடம் போவது?

அரசி யோசிக்கிறாள். அப்போது குழந்தையின் சகோதரச் சிறுமி தயங்கித் தயங்கி அங்கு வருகிறாள்.

இளவரசி: நீ எபிரேயச் சிறுமியல்லவா?

சிறுமி: ஆம் அரசி!

இளவரசி: உனக்கு நிறையச் சன்மானம் தருவேன். இந்தக் குழந்தையை வளர்த்து தருவதற்கு ஒரு எபிரேயத் தாயைக் கொண்டுவருகிறாயா?

சிறுமி: ஆம் அரசி. இதோ அழைத்து வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமி ஓடுதல்

தோழி 1: பழம் நழுவி பாலில் விழுந்தது போல் எல்லாம் தங்களின் சித்தம் போல் சித்திக்கிறது. இன்னும் சொன்னால் குழந்தையை ஆற்றிலே எறிந்துவிட்டு ஆறாத துயரத்திலிருக்கும் ஒரு எபிரேயத்தாய் எப்படியும் வரத்தான் போகிறாள்.

சிறுமி தாயோடு வருதல்

இளவரசி: எபிரேயப் பெண்ணே! இதோ! கேள்! நீ இந்தப் பச்சைக் குழந்தையை எடுத்து எனக்காக வளர்த்துத் தருவாய். நான் உனக்குச் சன்மானம் தருவேன். இவன் என் இதயப்புத்திரன். இவனை கண்ணிமைபோல் காத்து வளர்த்து என்னிடம் தரவேண்டும்.


தாய்: தங்கள் சித்தம் போல் ஆகட்டும் அரசி.

திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – மூன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்: வயல்வெளி

பாத்திரங்கள் : எபிரேயன்! எபிரேயன் 2, காத், ஆசார், மோயீசன்,

**காத்:** ஆசார் பஞ்சத்தின் காரணத்தினால் உணவின்றித் தவித்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கானான் நாட்டிலிருந்து வந்த எபிரேயராகிய நமக்கு வளமான நிலம் மந்தைகளை மேய்க்கப் பசும்புல் தரை தந்து நாம் பல்கிப் பெருகி பெருவாழ்வு வாழ வைத்தவர் எகிப்திய மன்னன் பாரவோன். அவருக்கு எதிராக முணுமுணுப்பதும் குற்றம் சுமத்துவதும் அரசருக்கும், நாட்டிற்கும் விசுவாசமாக இல்லாதிருப்பதும் நன்றி கெட்டதனம். நீ. . . நன்றி கெட்டவன்.

**ஆசார்:** நீதி வேறு, நன்றி வேறு, நன்றி மறவாது இருப்பதும் ஒருவகையில் நீதிதான். ஆனால் நன்றிக்காக அநீதியை அங்கீகரிப்பதும், அடிமைத்தனமாக வாழ்வதும் அநீதிக்குத் துணை போவதாகும். பாரவோன் உன்னை எங்களில் ஒரு குழுவுக்கு அதிகாரியாக நியமித்ததினால் நீ உனது சொந்தச் சகோதரர்களின் மேல் சவாரி விடுகிறாய். அதிகார ஆசையால் பாரவோனுக்கு விசுவாசம் உள்ளவன் போல் நடிக்கிறாய்! நீ ஒரு இனத்துரோகி.

**காத்:** பேசுவதை அளந்து பேசு. யாரோடு பேசுகிறாய் என்பதை அறிந்து பேசு. உனது முதுகுப்பரப்பில் எகிப்தியனின் சாட்டை விளையாடும்.

**ஆசார்:** அடிக்குப் பயந்து அடங்கிப் கிடப்பேன் என்று மட்டும் எண்ணாதே. காலம் ஒரு நாள் மாறும். நம் கடவுளின் கருணை எம்மேல் பொழியும். அப்பொழுது எமது கடவுள் எமது முன்னோர்க்கு வாக்களித்த பாலும் தேனும் பொழியும், கானான் நாட்டுக்குப் போவோம். நீ உனது இனத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக உனது காலை உயர்த்தினால் உனது கால் துண்டிக்கப்படும்.

ஆத்திரம் அடைந்த காத் ஆசாருக்கு அடிக்கக் கையை உயர்த்தும் போது அங்கு வந்த மோயீசன் அவனுடைய கையைப் பிடிக்கிறான்.

மோயீசன்: தயவு செய்து நிறுத்து. நீ உன் அயலானை அடிப்பதென்ன? நீ எபிரேயன் அல்லவா?

காத்: மன்னன் பாரவோனின் அரண்மனையில் உண்டு குடித்து உல்லாசமாக வாழும் நீ உன்னை எங்களுக்குத் தலைவனாகவும், நடுவனாகவும் நியமித்தவன் யார்?. . .

மோயீசன்: நான் உனது இனத்தவன். உன் இனத்தவனுக்கு நீ அநீதி செய்வதைக் கேட்க எனக்கு உரிமை உண்டு.

காத்: அந்த உரிமையினால் தானோ நீ நேற்று எகிப்தியனைக் கொன்றது போல் என்னையும் கொன்றுவிட நினைக்கிறாய்.

மோயீசன் அச்சமடைந்து

மோயீசன்: நீ. . . நீ என்ன சொல்கிறாய்?

காத்: ஹ. . . ஹ. . . ஏன் பயந்து விட்டாயா? பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடித்தால் உலகம் இருண்டு விட்டதென்று அர்த்தமா? நீ நேற்று எபிரேயன் ஒருவனுக்கு எகிப்தியன் அடிப்பதைக் கண்டாய். கலக்கமடைந்தாய். அங்குமிங்கும் பார்த்தாய். வேறு எவரும் அங்கு இல்லை என்று கருதிக் கொண்டு எகிப்தியனை அடித்துக் கொன்று குழி வெட்டிப் புதைத்தாய்.

மோயீசன்: நீ பார்த்தாயா?. . . நீ பார்த்தாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்: நான் பார்த்தேனா, இல்லையா அது எதற்கு? இதோ! உனது அயலவனே சாட்சி. கேட்டுப்பார் நான் வருகிறேன்.

**அவன் போனபின்**

மோயீசன்: அப்படியா சகோதரனே! நீயும் பார்த்தாயா?

ஆசார்: சகோதரா உன்னை அப்போதுதான் முதன் முதலாகப் பார்த்தேன். இதற்கு முன் நான் உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். உன்னைப் பார்த்தில்லை. நேற்று இந்த சம்பவம் அந்தக் கொலை, நீ செய்த கொலை - எரிந்த என் வயிற்றில் பால் வார்த்தது.

மோயீசன்: (ஆச்சரியத்தோடு) என்ன! நான் எபிரேயனை கொன்றது உனது வயிற்றில் பால் வார்த்ததா?

ஆசார்: இருக்காதா என்ன? குயவன் கையிலுள்ள களிமண் போல எகிப்தியர்கள் எங்களை பிசைந்து தட்டிக் கொடுமைப்படுத்துகிறார்கள். தாச்சிச் சட்டியில் இலையை வறுப்பது போல் எங்களை வரட்டி எடுக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்கு இதைத்தாங்குவது, சகிப்பது? எங்கள் கடவுள் எங்களை இப்படி கை நெகிழ்ந்தது ஏன்? எங்கள் வானத்தில் கிழக்கு வெளிக்குமா?

மோயீசன்: சகோதரா! நிலைமை ஆபத்தாக இருக்கிறது. நேற்றுநான் செய்த கொலையை பாரவோன் மன்னன் எப்படி அறிந்து கொண்டான் என்று எனக்குத் தெரியாது. அவன் என்னைக் கொல்லத் தேடுகிறான்.

ஆசார்: எனக்குத் தெரியும் யார் பாரவோனிடம் இந்தக் கொலைபற்றிச் சொன்னதென்று

மோயீசன்: யார்?. . . யார் அது?

ஆசார்: வேறு யாருமல்ல எனக்கு அடிப்பதற்கு கையை உயர்த்தியவனும் உன்னுடன் எதிர்த்து வாதாடியவனுமான எமது இனத்தவன் காத் என்பவன் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105168

**மோயீசன்:** ஆண்டவனே! அமுதமும் நஞ்சும் ஒரு கிண்ணத்திலா வார்க்கப்பட்டிருக்கிறது? இனத்தவனை இனத்தவன் காட்டிக் கொடுப்பதும் இழிவிலும் இழிவு. இனத்தவன் இனத்தவனை அடிப்பது அடக்குவது, அச்சுறுத்துவது வருத்தத்திற்குரியது.

**ஆசார்:** ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை ஓரங்கட்டிவிட்டு பொதிமாடுகளாக உழைத்து ஓடாகக் காய்கின்றோம்... சகோதரா இன்னும் நீ இங்கு நிற்காதே. இன்று இரவோடு இரவாக எகிப்தை விட்டு ஓடிவிடு. உனது இனப்பற்றுக்கு என்றும் இறை அருள் பக்கபலமாக இருக்கும். . . சென்று விடு. . .

> சொல்லிவிட்டு ஆசார் போகிறான் மோயீசன் அவன் போவதைப் பார்த்துக் கொண்டு நிற்றல். பின் யோசித்தபடி.

**மோயீசன்:** நெஞ்சு பொறுக்குமா? இல்லை... இல்லை.. நெருப்பாய் கொதிக்கிறது. என்து மக்களை எகிப்திய மண்ணில் தவிக்க விட்டுவிட்டு எங்கு செல்வேன்? யாரிடம் செல்வேன் திக்கும் தெரியவில்லை. திசையும் புரியவில்லை. ஓ! எம்முன்னோரின் தேவனே, நான் எங்கு செல்வேன்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி – நான்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: புல்வெளி

பாத்திரங்கள்: மோயீசன், கடவுள்

மோயீசன் தற்செயலாகத் திரும்பி பார்க்க முட்செடி எரிகிறது. முட்செடியை மேடைக்கு வெளியில் இருப்பது போல காட்டலாம்.

மோயீசன்: *அதோ! இந்தப் பட்டப்பகலில் இந்த வெட்டை வெளிச்சத்தில் முட்செடி எரிகிறதே! நெருப்புக் கொழுந்து அது - என்ன அற்புதம்... முட்செடி வெந்து போகாமல் அப்படி பச்சையாகவே இருக்கிறது. நெருப்பென்றால் புகையுமே! புகையையும் காணோம்... ஆகா.... நான் அருகில் சென்று அதன் அதிசயக் காட்சியைக் கண்டு களிப்பேன்.*

மோயீசன் ஒரு அடி எடுத்து நடக்க ஆரம்பிக்கும் போது முட்செடியில் கடவுளின் குரல் ஒலிக்கிறது. இப்போது முட்செடியின் பக்கத்திலிருந்து மேடைக்கு பொட்டொளி பாய்ச்சிக் காட்டலாம்

கடவுள்குரல்: *மோயீசா! மோயீசா!*

மோயீசன்: *(பரபரப்படைந்து) இதோ! இதோ இருக்கிறேன்.*

கடவுள்குரல்: *அணுகிவராதே, உன் காலணிகளைக் கழற்றிவிடு, ஏனெனில் நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. உன் தந்தையின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நாமே.*

மோயீசன் கடவுளை உற்றுப் பார்க்கத்துணியாமல் தன்முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்குரல்: எகிப்தில் நம் மக்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்களைக் கண்ணுற்றோம். வேலைவாங்கும் மேற்பார்வையாளனின் கொடுமையின் பொருட்டு அவர்களிடுகின்ற கூக்குரலையும் கேட்டோம். அவர்கள் உற்ற துயர் துடைக்க எகிப்தியர் கைகளின்றும் அவர்களை விடுவித்துக்காப்பாற்றவும் கானானையர், ஏத்தையர், யெபுசேயர் வாழும், பாலும், தேனும் பொழியும் பூமியிலே அவர்களைக்கொண்டு போய் சேர்க்கவும் இறங்கி வந்தோம். நீ வா, இஸ்ராயேல் மக்களாகிய நம் மக்களை எகிப்திலிருந்து புறப்படும் பொருட்டு நாம் உன்னை பாரவோனிடம் அனுப்புவோம்.

மோயீசன்: ஆண்டவரே! பாரவோனிடம் போகவும் இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்.

கடவுள்குரல்: நாமே உன்னோடு இருப்போம். அன்றியும் நீ நம்மக்களை எகிப்தினின்றும் வெளியேறச் செய்தபின் இம்மலையின் மீதே கடவுளுக்குப் பலியிடுவாய். நாம் உன்னை அனுப்பினோம் என்பதற்கு இதுவே அடையாளம்.

மோயீசன்: ஆண்டவரே அப்படியே ஆகட்டும். ஆனால் அவர்களுக்கு இவற்றைக் கூறும் போது ஆண்டவருடைய பெயர் என்ன என்று என்னைக் கேட்டால் அவர்களுக்கு அடியேன் என்ன சொல்வது. . .

கடவுள்குரல்: இருக்கிறவர் நாமே. ஆதலால் இருக்கிறவரே, உங்கள் முன்னோர்களின் கடவுளே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல். உங்களுக்கு எகிப்திலே ஏற்பட்ட யாவற்றையும் கண்ணுற்றோம். கருணை கொண்டோம். ஆதலால் உங்களை எகிப்தினின்றும் விடுவித்து பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்துச் செல்லத் திருவுளம் கொண்டோம் என்று அவர்களுக்குச் சொல். அவர்கள் உன் சொல்லுக்கு செவி சாய்ப்பார்கள்.

மோயீசன்: ஆண்டவரே! எல்லாம் உமது திருவுளப்படியே ஆகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்குரல்: மோயீசா! நீ இஸ்ராயேலின் பெரியோர்களோடு எகிப்து மன்னனிடம் போய், எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் எங்களை அழைத்திருக்கிறார். நாங்கள் மூன்று நாள்கள் பிரயாணம் போய் எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு பலி செலுத்தவேண்டும் என்று அவனுக்கு சொல். ஆனால் எகிப்து மன்னன் நம் கைவல்லமை கண்டாலொழிய உங்களைப் போகவிடமாட்டான் என்று அறிவோம். ஆதலால் நாம் கையை நீட்டி எகிப்தியரிடையே பலவகை அற்புதங்களையும் செய்து அவர்களைத் தண்டிப்போம். அதன்பின் அவன் உங்களைப் போகவிடுவான். மேலும் நாம் இம்மக்களுக்குத் தயவு கிடைக்கச் செய்வதால் நீங்கள் புறப்படும் பொழுது வெறுமையாய் போவதில்லை. எவ்வாறு என்றால் ஒவ்வொரு பெண்ணும் தன்தன் அயல்வீட்டுக்காரியிடமும் தான்தான் தங்குகிறவளிடமும் பொன், வெள்ளிப் பாத்திரங்களை யும் ஆடைகளையும் கேட்டுவாங்குவாள். நீங்களோ அவற்றை உங்கள் புதல்வர், புதல்வியர்களுக்கு அணிவித்து எகிப்தைக் கொள்ளையிட்டுப் போவீர்கள்.

மோயீசன்: ஆண்டவரே !என்னை மன்னியும்; அவர்கள் என்னை நம்பவும் மாட்டார்கள் என் வார்த்தைக்குச் செவி கொடுக்கவும் மாட்டார்கள். ஆண்டவர் உமக்குக் காட்சி தரவில்லை என்று சொல்வார்களே.

கடவுள்குரல்: மோயீசா உன்கையில் இருக்கிறது என்ன?

மோயீசன்: அது ஒரு கோல்.

கடவுள்குரல்: அதைத் தரையிலே போடு.

மோயீசன் அப்படியே செய்ய அது பாம்பாக மாறியது. அது கண்டு மோயீசன் கலங்கி ஓடுதல். கடவுள் தடுத்தல்.

மோயீசன்: ஐயோ! பாம்பு ஆண்டவரே! பாம்பு!

கடவுள்குரல்: மோயீசா! நில்! உன் கையை நீட்டி அதன் வாலைப் பிடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோயீசன் தயங்கியபடி அதன் வாலைப் பிடித்து தூக்குதல். அது மீண்டும் கோலானது.**

**மோயீசன்:** *அற்புதங்களின் ஆண்டவரே! அடியேன் உம்மிடம் சரண் அடைகின்றேன்.*

**கடவுள்குரல்:** *உன் கையை உன் மடியில் வை.*

**மோயீசன் மடியில் கைவைத்தல்**

**மோயீசன்:** *ஆண்டவரே என் மடி உறைபனிபோல வெண்தொழுநோய் பிடித்திருக்கிறதே.*

**கடவுள்குரல்:** *மோயீசா! உன் கையைத் திரும்பவும் உனது மடியிலே வை.*

**மோயீசன் அப்படியே செய்தல்**

**மோயீசன்:** *ஆண்டவரே! வெண்தொழுநோய் போயொழிந்து என் தசை வழமை போல் இருக்கிறதே.*

**கடவுள்குரல்:** *அவர்கள் முந்தின அடையாளத்தைக் கண்டு நம்பாமலும் உன் வார்த்தைக்குச் செவி கொடுக்காமலும் இருப்பார்களாயின் பிந்தின அடையாளங்களைக் கண்டு உன்னை நம்புவார்கள். அவர்கள் இவ்விரண்டு அற்புதங்களைக் கண்டும் நம்பாமலும் உன் வார்த்தைக்குச் செவிகொடுக்காமலும் இருப்பார்களாயின் அப்பொழுது ஆற்று நீரை முகந்து அதைத் தரையிலே ஊற்று. ஆற்றிலே முகந்த நீர் எல்லாம் இரத்தமாக மாறிப்போம்.*

**மோயீசன்:** *ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேளும். நேற்றும் நேற்று முன்தினமும் நான் பேச்சுத்திறன் உள்ளவன் அல்லேன். சிறப்பாக ஓர் அடியேனுக்கு திருவாக்கு அருளினது முதல் நான் திக்கு வாயனும், மந்தநாவு உள்ளவனும் ஆனேன்.*

**கடவுள்குரல்:** *மனிதனின் வாயை உண்டாக்கியவர்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மோயீசன்: | நீரேதான். |
| கடவுள்குரல்: | ஊமையனையும், செவிடனையும், கண்பார்வை உள்ளவனையும், பார்வையற்ற குருடனையும் படைத்தது? |
| மோயீசன்: | நீரேதான். . . நீரேதான் ஆண்டவரே! |
| கடவுள்குரல்: | ஆகையால் நீ போ. நாம் உன் வாயோடு இருந்து நீ பேசவேண்டியதை உனக்குச் சொல்லிக்கொடுப்போம். |
| மோயீசன்: | ஆண்டவரே! அச்சமுற்றேன். கெஞ்சிக் கேட்கின்றேன். எவனை அனுப்பவேண்டுமோ எவன் இதற்குத் தகுதியோ அவனையே அனுப்பியருளும். |
| கடவுள்குரல்: | (சினந்து) மோயீசா! யாம் இருக்கப்பயமா? லேவியனாகிய உன் சகோதரன் ஆரோன் சொற்திறம் மிக்கவன் என்றும் அறிவோம். அதோ அவன் உன்னை எதிர்கொண்டு வருகிறான். உன்னைக் கண்டதும் அவன் மனம் மகிழ்வான். நீ அவனோடு பேசி நம் வாக்குறுதிகளை அவன் வாயிலே இடு. நாமோ உன் வாயிலும், அவன் வாயிலும் இருந்து கொண்டு நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு உணர்த்துவோம். அவன் உனக்குப் பதிலாக மக்களிடம் பேசி உனக்கு வாயாக இருப்பான். நீயோ கடவுளுக்கு அடுத்தவைகளில் அவனுக்கு வாயாய் இருப்பாய். இந்தக் கோலையும் கையில் எடுத்துக் கொண்டு போ. அதைக் கொண்டே அற்புதங்களைச் செய்து வருவாய். |


கடவுளின் குரல் அடங்க ஆரோன் அங்கு வருகிறான். மோயீசன் அவனைக் கட்டித் தழுவி நடந்தவற்றைச் சைகையால் உணர்த்துதல். மோயீசனும் ஆரோனும் முழங்கால் குப்புற விழுந்து கடவுளை வணங்குதல்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி — ஐந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: வழி

பாத்திரங்கள்: மோயீசன், ஆரோன், கடவுள், இஸ்ராயேல் மக்கள்.

மக்கள் ஒரு சிறு குழுவாக இருக்கலாம்.

மக்கள் 1: (மோயீசனையும், ஆரோனையும் பார்த்து) என்ன கருமம் செய்தீர்கள்? உங்களுக்கு இதயமே கிடையாதா?

மக்கள் 2: நீங்கள் பாரவோனுக்கும், அவன் ஊழியருக்கும் முன்பாக எங்கள் நறுமணத்தை நாற்றமாக மாற்றி அவர்கள் எங்களை கொல்லும்படியான வாளை அவர்கள் கையிலே கொடுத்திருக்கிறீர்களே?

மோயீசன்: ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் எங்களைத் திட்டித் தீர்க்கிறீர்கள்? நாங்கள் உங்களுக்கு ஏதும் துன்பம் செய்தோமா?

மக்கள்: சும்மாக்கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தீர்கள். கட்டிக் கிடந்த வெறிநாயை அவிழ்த்து விட்டிருக்கிறீர்கள். உங்கள் கையாலாகாத்தனத்தால் நாங்கள் தாம் கயிறாகத் திரிபடுகிறோம்.

ஆரோன்: சகோதரர்களே! எங்கள் மேல் கோபிக்கவேண்டாம். தயவு செய்து நடந்ததைச் சொல்லுங்கள்.

மோயீசன்: நாங்கள் மூப்பர்களோடும், பெரியவர்களோடும், உங்களோடும் கலந்தாலோசித்தோம். நீங்களும் ஆண்டவரின் அரும் செயல்களை நம்பி அதற்கு நன்றிக் கடனாக நெடுங்கிடையாக விழுந்து ஆண்டவரைத் தொழுதீர்கள், பாரவோனோடு பேசும்படி எமக்கு அனுமதி தந்தீர்கள். இப்போது ஏன் எங்களை வெறுக்கிறீர்கள்?

மக்கள் 1: அற்புதங்கள் செய்தீர்கள், அதனால் என்ன பயன் கண்டீர்கள்? பாறையிலும் பாரவோனின் மனது வைரம். அவன் அற்புதங்களை கண்டு அசையப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் 2: பாலைவனத்திலே நமக்கு வழிபாடு செய்ய நம்மக்களைப் போக விடும்படி ஆண்டவர் ஆணையிடுகிறார் என்று பாரவோனுக்குச் சொல்லியபோது அவன் உங்களுக்கு என்ன சொன்னான். அதை எங்களுக்கும் சொல்லுங்கள்.

ஆரோன்: நான் ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு, இஸ்ராயேலரைப் போகவிட வேண்டியதென்ன? அந்த ஆண்டவர் யார்? நான் ஆண்டவரை அறியேன்? இஸ்ராயேலரைப்போக விடவும் மாட்டேன் என்றான் பாரவோன்.

மோயீசன்: அத்துடன் விட்டானா? தங்கள் வேலைகளைச் செய்யாதபடி நீங்கள் மக்களை குழப்புவதென்ன? உங்கள் சுமைகளை நீங்களும் சுமக்கப் போங்கள் என்று எங்களுக்கும் கட்டளையிட்டான்.

மக்கள் 1: பார்த்தீர்களா? கடவுளின் அற்புதமும் பாரவோனிடம் அவியவில்லை. அவன் உங்கள் மேல்கொண்ட கோபத்தால், முன்பை விட எங்களை வதைக்குமபடி கட்டளையிட்டுள்ளான்.

மக்கள் 2: முன்பு வைக்கோல் கொடுத்து குறிப்பிட்ட தொகைச் செங்கற்களைச் செய்து வந்தோம். இப்போது கண்காணிப்பாளர்கள் வைக்கோல் கொடுக்காமலே முன் போல் தொகைச் செங்கற்கள் தரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறான்.

மக்கள் 1: நாங்கள் வைக்கோல் தேடி அலைவதெங்கே? செங்கல் அரிவதெங்கே?

மக்கள் 2: செங்கல்லின் தொகை குறைந்தால் சாட்டைகள் எங்கள் முதுகுகளின் தோலை உரிக்கின்றன.

மக்கள் 1: எங்களுக்கு கண்காணிப்பாளர்களால் இழைக்கப்படும் கொடுமைகளை பாரவோனிடம் எடுத்துரைத்து அழுது புலம்பினோம்..

மக்கள் 2: அவன் என்ன சொன்னான் தெரியுமா? நீங்கள் சோம்பலாய் இருப்பதினால் அல்லவா ஆண்டவருக்கு பலியிடுவோம் என்கிறீர்கள்? நல்லது போய் வேலையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105168

செய்யுங்கள். வைக்கோலும் உங்களுக்கு தரப் படமாட்டாது. வாடிக்கையான செங்கற் கணக்கை நீங்கள் செலுத்தியாகவும் வேண்டும்.

மக்கள் 1: இந்த அக்கிரமங்கள் உங்களால்தான் எங்கள் மேல் வந்து விழுந்தது. ஆண்டவர் உங்களை விசாரித்து தீர்வையிடக் கடவாராக.

மக்கள் 2: எங்கள் ஆண்டவர் பெயரால் எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். நாங்கள் இப்போது சொல்வது இதுதான். நீங்கள் எங்களை விட்டு அகன்று போங்கள். நாங்கள் போகிறோம்.

**மக்கள் மோயீசனையும் ஆரோனையும் விட்டு விட்டுப்போக மோயீசன் துக்கத்தால் வானத்தைப் பார்த்து வேண்டுகின்றார்.**

மோயீசன்: ஆண்டவரே நீர் இந்த மக்களுக்குத் துன்பம் வருவித்ததென்ன? அடியேனை ஏன் அனுப்பினீர்? இதோ நான் உம்முடைய பெயரைச் சொல்லி பாரவோனிடம் பேசினேன். அன்று முதல் அவன் உமது மக்களை துன்பப்படுத்தி வருகிறான். நீர் அவர்களை விடுதலையாக்கவில்லையே?

கடவுள்: மோயீசா! நாம் பாரவோனுக்குச் செய்வதை நீ இப்பொழுதே காணப்பெறுவாய். உண்மையிலே அவன் நமது வலுத்த கையைக் கண்டே அவர்களைப் போகவிட்டு வற்புறுத்தித் தன் நாட்டிலிருந்து புறப்படும்படி தானே அவர்களை மன்றாடுவான். நாம் உன் முன்னோர்களுக்கு எல்லாம் வல்ல கடவுளாய் காட்சியளித்தவர். ஆயினும் அதோனாயி என்னும் தமது பெயரை அவர்களுக்குத் தெரிவித்தோமில்லை. நாம் கானான் நாட்டை அவர்களுக்கு அளிப்பதாக அவர்களோடு உடன்படிக்கை செய்தோம். எகிப்திலே அவர்கள் விட்ட பெருமூச்சைக் கேட்டு நமது உடன்படிக்கையை நினைவு கூர்ந்தோம். ஆண்டவராகிய நாமே உங்களை எகிப்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலிருந்தும் தம் சொந்த மக்களைத் தெரிந்து கொள்வோம். நாம் உங்களைச் சிறையிலிருந்து விடுவித்து உங்கள் முன்னோர்க்கு வாக்களித்த நாட்டில் குடியேற்றுவோம். அந்த நாட்டை உங்களுக்கு உடைமையாக்குவோம் என்பதே. நாம் உங்கள் கடவுளாக இருப்போம் என்பதற்கு அடையாளம் என்று நம் மக்களுக்கு சொல். அதேபோல் பாரவோனுக்கும் எகிப்தில் நின்று எமது மக்களை அனுப்பிவிடுமாறு சொல்.

**மோயீசன்:** ஆண்டவரே! என் தேவனே! இஸ்ராயேல் மக்களே என் வார்த்தைக்குச் செவி கொடுக்கவில்லை. பாரவோன் எப்படிக்கொடுப்பான்? அதிலும் நான் விருத்த சேதனமில்லாத உதடுகளை உடையவன் அல்லவா?

**கடவுள்குரல்:** கலங்காதே! உன் சகோதரனாகிய ஆரோன் உனக்காகப் பேசுவான். ஆனால் நாம் பாரவோனுடைய இதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்து நாட்டிலே நம் அருங்குறிகளையும், அற்புதங்களையும் மிகுதியாகக் காட்டுவோம். ஆயினும் பாரவோன் உங்களுக்குச் செவிகொடான். ஆதலால் நாம் எகிப்திற்கு விரோதமாய் நம் கையை ஓங்குவோம். மகத்தான தண்டனைகளின் மூலம் நம் மக்களை எகிப்திலிருந்து புறப்படச் செய்யும் போது நாமே ஆண்டவர் என்று எகிப்தியர் அறிந்து கொள்வார்கள்.


**மோயீசன்: ஆரோன்:** ஆண்டவரே! உம் அடியார்கள் உமது திருவுளத்தின் படியே செய்கின்றோம்.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி – ஆறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: பாரவோன் அரண்மனை.

பாத்திரங்கள்: பாரவோன், அமைச்சர், காவலன், மோயீசன், ஆரோன், உரைஞன் 1, உரைஞன் 2.

**காவலாளி:** (காவலாளி வந்து வணங்கி) அரசே!

**பாரவோன்:** என்ன செய்தி?

**காவலாளி:** எபிரேயர்களாகிய மோயீசனும், ஆரோனும் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்.

**பாரவோன்:** எதற்காக?

**காவலாளி:** தங்களோடு நேரில் பேசவேண்டுமாம்.

**பாரவோன்:** ஹ... ஹ... ஹ.... (சிரிப்பு) எபிரேயர்களின் கடவுளின் கட்டளைப்படி, நான் இஸ்ராயேலர்களை எகிப்தை விட்டு அனுப்பி விட வேண்டுமாம். கட்டளை! எபிரேயர்களின் கடவுளின் கட்டளை. அது நடக்கவே நடக்காது. இந்தப் பாருலகுக்கு அரசன் இந்தப் பாரவோனே. அரசும் எனதே. அகில உலகுக்கும் அரசன் நானே. ஆதலால் ஆண்டவனும் நானே.. எபிரேயரின் கடவுள் எனக்கும் கடவுளே! அதையும் பார்த்து விடுகிறேன்.

**அமைச்சர்:** அரசே ! என்னை மன்னிக்க வேண்டும். மோயீசனின் கோல் பாம்பாகியதும், அந்தப்பாம்பு எமது மந்திரவாதிகளின் பாம்புகளை விழுங்கியதையும் தாங்கள் அறிவீர்கள். அதே போல் மோயீசனும், ஆரோனும் கோலால் ஆற்றின் மேல் அடிக்க அது இரத்தமானது, மீன்களும் செத்து மடிந்தன. முகங்கொடுக்காதபடி ஆறும் துர்நாற்றமடித்தது.

**பாரவோன்:** அதற்கென்ன? எமது மந்திரவாதிகளும் அவ்வாறு அவர்களுக்குச் செய்து காட்டவில்லையா?

**அமைச்சர்:** அதை மறுக்கவில்லை அரசே! ஆனால் ஆற்று நீர் குடிக்க உதவாமையால் தண்ணீர் இன்றி தவித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடிமக்களாகிய எகிப்தியர்கள் ஆற்றோரம் நெடுக ஊற்றுகள் தோண்டி தண்ணீருக்கு அலைந்தார்களே. ஏழு நாட்களாய் நாம் தண்ணீர் இன்றி துன்பத்தையே தண்ணீராயப் பருகினோம். . . எமது குடிகளின் நலன்களுக்காக. . .

பாரவோன்: எபிரேயரின் கடவுளுக்கும், எபிரேயர்களுக்கும் என்னை அடிபணியச் சொல்கிறீரா? எனது சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்கச் சொல்கிறீரா? நான் யாருக்குமே தலை வணங்கமாட்டேன். யாரங்கே?.

காவலாளி: (வணங்கி) அரசே!

பாரவோன்: அந்த எபிரேயர்களை வரச்சொல்!

**மோயீசனும், ஆரோனும் வந்து அரசனைக் கனம் பண்ணி நிற்றல்**

மீண்டும் என்ன? எதற்காக வந்தீர்கள்?

ஆரோன்: நமது கடவுளாகிய ஆண்டவர் சொல்கிறார். 'நமக்கு வழிபாடு செய்யும்படி நமது மக்களை அனுப்பிவிடு' என்கிறார்.

பாரவோன்: அனுப்பாது விட்டால்!

ஆரோன்: எகிப்து நாடெங்கும் தவளைகளைப் பெருக வைத்து எகிப்தை வதைப்போம் என்கிறார் ஆண்டவர். ஆறு கொப்பளித்தாற் போல் தவளைகளைப் பிறப்பிக்கும். அவை புறப்பட்டு வந்து உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும், உன் ஊழியர்களின் வீடுகளிலும், உன் மக்களிடத்திலும், உன் அடுப்புகளிலும், நீ உண்டு கழித்த எச்சில்களிலும் வந்து ஏறும் என்று ஆண்டவர் சொல்கிறார்

பாரவோன்: ஹ. . . (சிரித்தல்) அற்புதங்கள், அதிசயங்களால் என்னை அச்சுறுத்தப் பார்க்கிறீர்களா? உங்கள் கடவுளின் கட்டளையை நான் ஏற்கப் போவதுமில்லை, உங்கள் மக்களை கடவுளுக்குப் பலி செலுத்த அனுமதிக்கப் போவதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரோன்:** (ஆரோன் தனது கையை நீட்டி) சேனைகளின் தேவனாகிய ஆண்டவரே! நீர் உமது அடியார்களுக்கு வாக்களித்தபடி அற்புதம் செய்யும். ஆறுகளிலிருந்தும் அருவிகள் குளங்களிலிருந்தும் சதுப்பு நிலங்களிலிருந்தும் தவளைகள் படை போல் பல்கிப் பெருகி வருவதாக.

அப்போது தவளைகள் வருவதை வண்ண ஒலி, ஒளியினால் காட்டலாம். தவளைகள் கத்துவது போல் இசை எழும்பலாம். பாரவோன் மனமிசைந்து

**பாரவோன்:** எபிரேயத் தலைவர்களே! இந்தத் தவளைகள் என்னையும் என் மக்களையும் விட்டு நீங்கும்படி ஆண்டவரை வேண்டுங்கள். நானே ஆண்டவருக்கு பலி செலுத்த மக்களை அனுப்பி வைப்பேன். இது சத்தியம்...

**மோயீசன்:** அரசே! அப்படியே ஆகட்டும். தவளைகள் இனி ஒழிந்து போய் ஆற்றில் மட்டும் இருக்கும்படி உமக்காகவும், உம் ஊழியர்களுக்காகவும் உம் மக்களுக்காகவும் மன்றாட வேண்டிய காலத்தை நீர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

**பாரவோன்:** (யோசித்து விட்டு) நாளை...

**மோயீசன்:** எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு நிகரானவர் இல்லை என்று நீர் அறிந்து கொள்ளும் பொருட்டு நான் உமது வார்த்தையின்படியே செய்வேன்.

மோயீசனும், ஆரோனும், பாரவோனை விட்டு அகலுதல். மேடையில் நிற்பவர்கள் அசையா நிலையில் நிற்க உரைஞர்கள் இருவர் வருதல்

**உரைஞன்1:** மறுநாள் மோயீசனும் ஆரோனும் தங்கள் பாரவோனுக்கு கொடுத்த வாக்கின்படி ஆண்டவரை வேண்டினர். தவளைகள் எகிப்தின் பட்டி தொட்டிகள் எங்கணும் செத்து மடிந்தன. மக்கள் அவைகளை பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியல்களாகச் சேர்த்து வைத்தனர். நாடு எங்கிலும் நாற்றமடித்தது.

உரைஞன் 2: ஆனாலும் பாரவோன் மோயீசனுக்கும் ஆரோனுக்கும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லை. எபிரேயர்களை கடவுளுக்குப் பலிசெலுத்த அனுப்பிவிடவில்லை. அவன் மனம் கடினப்பட்டது. அதனால். . .

உரைஞன் 1: கடவுள் கடுங்கோபம் கொண்டார். மோயீசனை அழைத்தார். உன் கையை நீட்டி புழுதியின் மேல் அடி. எகிப்து நாடெங்கும் கொசுக்கள் உண்டாகும் என்று ஆரோனுக்குச் சொல்லும்படி பணித்தார்.

உரைஞன் 2: ஆரோன் தன் கையை நீட்டி புழுதியின் மேல் அடித்தார். தேனீக்கள் குவிந்தது போல் கொசுக்களும் ஈக்களும் எகிப்து நாடெங்கிலும் ஒரு இடமும் மிச்சமின்றி மொய்த்துக் கொண்டன. . .

உரைஞன் 1: பாரவோன் கொசுக்களை அழிக்கும்படி தனது மந்திரவாதிகளிடம் கட்டளையிட்டான். ஆனால் அவர்களால் முடியவில்லை. நாட்டு மக்கள் தொல்லைப்பட்டார்கள்; சகிக்கமுடியாமல் சிணுங்கினார்கள்.

உரைஞன் 2: அதனால் கதிகலங்கிய பாரவோன். . .

**உரைஞர்கள் இருவரும் மேடையை விட்டு விலக பாரவோன் அசையா நிலையில் நின்று விடுபட்டுப் பேசுதல்**

பாரவோன்: யாரங்கே?

காவலாளி: அந்த எபிரேய தலைவர்களை தாமதியாது அழைத்து வா.

**மோயீசனும் ஆரோனும் பாரவோனிடம் வருதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவோன்: எபிரேயத் தலைவர்களே! நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. அதனால் உங்கள் கடவுள் என்னையும் எனது மக்களையும் கொசுக்களால் தண்டித்தார். ஆதலால் நீங்கள் உங்கள் கடவுளுக்கு வழிபாட்டை இங்கேயே செய்யுங்கள்.

மோயீசன்: அவ்வாறு செய்யத்தகாது. ஏனென்றால் எகிப்தியர் வெறுப்பனவற்றைக் கடவுளாகிய ஆண்டவருக்கு நாங்கள் பலிசெலுத்தவேண்டும். எகிப்தியர் வழிபட்டு வருவனவற்றை அவர்கள் முன்னிலையிலேயே நாங்கள் அளிப்போமாயின் அவர்கள் எங்களைக் கல்லால் எறிவாரன்றோ? நாங்கள் பாலைவனத்தில் மூன்று நாள் பயணம் செய்து ஆண்டவர் எங்களுக்கு கட்டளையிட்டபடி அவருக்கு பலிசெலுத்துவோம்.

பாரவோன்: உங்கள் கடவுளுக்கு நீங்கள் பாலைவனத்திலே பலி செலுத்துங்கள். ஆனால், நீங்கள் அதிக தூரம் போகாதீர்கள். எனக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

மோயீசன்: உமது வேண்டுகோளின்படியே செய்வோம். நாளையே ஈக்களும் கொசுக்களும் நாட்டை விட்டு நீங்கும். ஆனால் நீர் இனிமேலும் ஆண்டவருக்குப் பலியிட மக்களைப் போகவிடாமல் என்னை வஞ்சிக்க வேண்டாம்.

மோயீசனும், ஆரோனும் போக மேடையில் உள்ளவர்கள். அசையா நிலையில் நிற்க உரைஞர்கள் இருவரும் மேடைக்கு வருதல்.

உரைஞன் 1: ஈக்களும், கொசுக்களும் எகிப்தை விட்டு ஒழிந்து போயின. ஆனால், பாறையைக் காட்டிலும் கடின மனம் படைத்த பாரவோன், எபிரேயர்கள் தமது கடவுளுக்குப் பாலைவனத்தில் பலிசெலுத்த அனுமதிக்கவில்லை.

உரைஞன் 2: அதனால் கடவுள் சினந்தார். எகிப்தியரின் எல்லா மிருக சாதிகள்மேலும் மிகக்கொடிய கொள்ளை நோயைக் கொண்டுவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைஞன் 1: இஸ்ராயேலரின் மிருகங்கள் ஒன்றும் சாகவில்லை. இதையறிந்த பாரவோன் மனம் இன்னும் கடினப்பட்டதால் அவன் இஸ்ராயேல் மக்களை பலிசெலுத்த விடவில்லை.

உரைஞன் 2: கடவுள் மோயீசனையும், ஆரோனையும் அழைத்தார். அடுப்பிலிருந்து கைநிறையச் சாம்பலை அள்ளி அதைப் பாரவோன் முன்னிலையிலே வானத்திலே தூற்றச் சொன்னார்.

உரைஞன் 1: அவர்கள் அப்படியேச் செய்தனர். தூற்றவே எகிப்து நாடெங்கிலும் சாம்பல் பரவியது.

உரைஞன் 2: அடுத்த கணமே எகிப்திலுள்ள மனிதர்களிலும், மிருகங்களிலும், புண்ணும் சீழ்க்கட்டிக் கொப்புளங்களும் உண்டாயின.

உரைஞன் 1: இருந்தும் பாரவோன் அசைந்து கொடுக்கவில்லை. கடவுள் அவனது மனதை மிகவும் கடினப்படுத்தினார்.

உரைஞன் 2: ஏனெனில் பாரவோனைக் கொடுமையாகத் தண்டிக்க அவனைக் கடுமையான குற்றவாளியாக்கவேண்டும் என்று கடவுள் திடங்கொண்டார்.

உரைஞன் 1: மீண்டும் மோயீசன் ஆரோன் பாரவோனுடன் பேசினர். இஸ்ராயேலர்களை எகிப்திலிருந்து விடும்படி கேட்டார். அவனோ அவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை

உரைஞன் 2: அதனால் கடவுளின் கருணை உறைந்தது. வானை மின்னல் கிழித்தது, இடி இடித்தது, ஊழி மழைபோல் கல் மழை பொழிந்தது. வீடுகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வயல் வெளிகளில் நின்ற மனிதர்கள், மிருகங்கள், பயிர்கள் எல்லாம் அழிந்தன.

உரைஞன் 1: ஆனால் ஒன்றும் மட்டும் உண்மையிலும் உண்மை. இஸ்ராயேல் மக்கள் குடியிருந்த யேசேன் பகுதியில் மட்டும் ஆலங்கட்டி மழை பொழியவில்லை.

உரைஞர்கள் இருவரும் மேடையை விட்டு விலக அசையா நின்ற பாரவோன் அசைந்தது பேசுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவோன்: *யாரங்கே?*

காவலாளி: *(வணங்கி) அரசே!*

பாரவோன்: *உடனடியாகச் சென்று அந்த எபிரேயத் தலைவர்களை வரச்சொல்.*

காவலாளி வெளியே செல்லுதல்

அமைச்சர்: *அரசே! நாட்டுநிலமை வரவர மோசமாகிக் கொண்டே போகிறது. நீங்களோ மனம் மாறுவதாகத் தெரிவில்லை.*

அப்பொழுது மோயீசன் ஆரோன் வருதல்

மோயீசன்: *அழைத்தீர்களாமே! என்ன விடயம்?*

பாரவோன்: *மோயீசா, ஆரோன் இம்முறையும் நான் பாவம் செய்தேன். ஆண்டவர் நீதியுள்ளவர். நானும் என் மக்களும் தீயவர்கள். நீங்கள் இனிமேல் இந்த நாட்டில் இராவண்ணம் நான் உங்களைப் போகவிடுவேன். நீங்கள் இடி முழக்கங்களும், ஆலங்கட்டிகளும் ஒழிய வேண்டுமென்று ஆண்டவரை வேண்டுங்கள்.*

மோயீசன்: *மன்னவரே! நீரும் உம் ஊழியரும் ஆண்டவருக்கு இன்னும் அஞ்சுவதில்லை என்று எனக்குத் தெரியும். ஆயினும் இம்முறையும் ஆண்டவரை வேண்டுகிறேன்.*

திரை

3411 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி — ஏழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இடம்: | பாரவோன் அரண்மனை, |
| பாத்திரங்கள்: | பாரவோன், அமைச்சர், காவலாளி, மோயீசன், ஆரோன் |

**காவலாளி:** *(அரசனை வணங்கி) அரசே!*

**பாரவோன்:** *என்ன செய்தி?*

**காவலாளி:** *அந்த எபிரேயத் தலைவர்களாகிய மோயீசனும் ஆரோனும் தங்களைக் காணுவதற்கு வந்துள்ளார்கள்.*

**பாரவோன்:** *ஹ. . . (சிரிப்பு) பாவம் ஏமாந்தவர்கள் அவர்களை உள்ளே வரச்சொல்.*

காவலாளி மோயீசனையும் ஆரோனையும் கூட்டி வரல்

*வருக! வருக! எபிரேயர்களின் கடவுளின் அடியார்களே வருக! என்ன வேண்டும்?*

**மோயீசன்:** *உம்மிடம் எதையும் வேண்டி நாங்கள் இங்கு வரவில்லை. அது எமக்கு அவசியமுமில்லை.*

**பாரவோன்:** *அப்போது எதற்கு வந்தீர்கள்?*

**மோயீசன்:** *எச்சரித்துப் போக வந்துள்ளோம்*

**பாரவோன்:** *யாரை!*

**மோயீசன்:** *எகிப்திய மன்னராகிய பாரவோனை*

**பாரவோன்:** *மன்னன் பாரவோனை. . ? உம். . . ஹ. . . வணங்கா முடியாகிய இந்தப் பாராளும் பாரவோனை எச்சரிக்க வந்தீர்கள். . . ம். . . எச்சரிக்கை! அது எதற்கு?*

**மோயீசன்:** *வஞ்சகத்திற்கு. . .*

**பாரவோன்:** *என்ன வஞ்சகம். . . ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோயீசன்: கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத வஞ்சகத்திற்கு.

பாரவோன்: இதயம் பேசினால் வாக்கு. வாய் பேசினால் அது வெறும் போக்கு. அதற்கு ஏன் வீண் தாக்கு?

மோயீசன்: வஞ்சகனின் இதயம் அவர்கள் வாயில் இருக்கிறது என்பதை இப்போது நிரூபித்து விட்டீர்கள்.

பாரவோன்: அதிகப் பிரசங்கம் தேவையில்லை. . .

மோயீசன்: செய்யப்போவது பிரசங்கமல்ல. நெருப்பைச் சுமந்திருக்கும் கடவுளின் வார்த்தைகளை முழக்கப்போகிறேன்.

பாரவோன்: முழக்கம். . . ஹ . . ஹ. . . (சிரித்தல்) வானமே இடிந்து வீழ்ந்தாலும் எனது இதயம் இளகப் போவதில்லை. எங்கே முழங்கும் பார்க்கலாம்?

மோயீசன்: எபிரேயருடைய கடவுளாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது. நீ எதுவரை நமக்குக் கீழ்ப்படியமாட்டாய்? நமக்குப் பலியிடும் படி நமது மக்களை போகவிடு. நீ முரண்டு கொண்டு மக்களை அனுப்பிவிட மாட்டேன் என்பாயாகில், இதோ நாம் நாளை உனது எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளிகளை வரச்செய்வோம். தரை தெரியாத படி அவை பூமியின் முகத்தை மூடி, ஆலங்கட்டி மழைக்குத் தப்பினவற்றையெல்லாம் தின்றுவிடும். உண்மையில் அவை வெளியே தலை காட்டும் மரங்களையெல்லாம் தின்றுவிடும். அன்றியும் உன் வீடுகளும், உன் ஊழியரின் வீடுகளும், எகிப்தியரின் எல்லா வீடுகளுமே அவற்றால் நிரம்பும். உன் மூதாதையரும் முன்னோர்களும் பூமியில் தோன்றின நாள் முதல் இந்நாள்வரையும் இப்படிக் கண்டதில்லை.

அமைச்சர்: அரசே! நாம் எதுவரை இந்தத் தொந்தரவைச் சகிக்க வேண்டும். தங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு பலியிட அந்த மனிதர்களைப் போகவிடும். எகிப்து நாடு அழிந்து போயிற்றென்று நீர் இன்னும் உணரவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவோன்: (யோசித்துவிட்டு) நீங்கள் போய் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலியிடுங்கள். ஆனால் போக இருக்கிறவர்கள் யார், யாரென்று சொல்லுங்கள்?

மோயீசன்: எங்கள் இளைஞரோடும், முதியவரோடும், புதல்வர், புதல்வியரோடும், எங்கள் ஆடு மாடுகளையும் கூடிக் கொண்டு போவோம். ஏனென்றால், நாங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு விழாக் கொண்டாட வேண்டும்.

பாரவோன்: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக. உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நான் போகவிட்டால் ஆண்டவரும் உங்களோடு போவாராக! நீங்கள் மிகவும் கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறீர்கள். இதைப்பற்றி சந்தேகிப்பவர் யார்? அது நடக்கவே நடக்காது. ஆனால் பெரிய மனிதராகிய நீங்கள் மட்டும் போய் ஆண்டவருக்குப் பலியிடுங்கள். நீங்கள் விரும்பிக் கேட்டது இதுதான். இல்லையேல் போய் விடுங்கள். என் கண்முன் நிற்கலாகாது. போய் விடுங்கள்.

மோயீசனும் ஆரோனும் மேடையை விட்டுப்போக உரைஞர்கள் இருவரும் மேடைக்கு வர பாரவோன் அசையா நிலையடைதல்.

உரைஞன் 1: கடவுளாகிய ஆண்டவர் எகிப்து நாட்டின் மேல் கையை நீட்டும்படி மோயீசனுக்கு கட்டளையிட்டார். மோயீசன் நீட்டினார்.

உரைஞன் 2: அப்பொழுது ஆண்டவர் அன்று பகலும் இரவும் வெப்பமான காற்று அடிக்கச்செய்தார். அந்தக் காற்று விடியற்காலையில் வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்தது.

உரைஞன் 1: வானம் வந்து தரையில் இறங்கியதுபோல் எகிப்தியரின் எல்லைக்குள் எவ்விடத்திலும் ஏராளமாய் வந்து விழுந்தன. கல் மழைக்குத் தப்பிய பயிர்கள், புல், பூண்டுகள் எல்லாம் அழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைஞன் 2: பாரவோன் இதயங்கலங்கி மோயீசனை அழைத்தான். மோயீசனும் ஆரோனும் வந்தார்கள். கடவுளை வேண்டினர். வெட்டுக்கிளிகளை செங்கடலில் தள்ளிவிட்டனர்.

உரைஞன் 1: இருந்தும் பாரவோன் மீண்டும் அவர்களை ஏமாற்றினான். ஆண்டவர் மோயீசன் மூலம் எகிப்து எங்கும் கக்கிருள் வந்து கௌவச் செய்தார்.

உரைஞன் 2: ஒருவனை ஒருவன் கண்டு கொள்ள முடியாத கக்கிருள். . . அவனவன் இடத்தில் அவனவன் இருந்தான். அணுவளவும் அசையவே முடியவில்லை.

உரைஞன் 1: இஸ்ராயேல் மக்கள் குடியிருந்த இடமெல்லாம் ஒளியாயிருந்தது.

உரைஞன் 2: எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் இருளைக் கொண்டு எகிப்துநாட்டின் மேல் அடித்த அடியினால் இதயம் கலங்கிய பாரவோன் மோயீசனை அழைத்தான்

உரைஞர்கள் மேடையை விட்டுவிலக பாரவோன் அசையா நிலையில் நின்றும் அசையும் நிலைக்கு வந்து பேசுதல்.

பாரவோன்: யாரங்கே?

காவலாளி: அரசே!

பாரவோன்: மீண்டும் அந்த எபிரேய மனிதர்களை அழைத்து வா.

காவலாளி சென்று மோயீசனையும் ஆரோனையும் அழைத்து வருதல்

பாரவோன்: வருக. . . வருக. . .

மோயீசன்: இம்முறையும் ஆசைகாட்டி எம்மை மோசம் செய்யவா அழைத்தீர்கள்?

பாரவோன்: இல்லவே இல்லை. இம்முறை உங்களைப் போகவிடுவேன். நீங்கள் போய் ஆண்டவருக்கு பலியிடுங்கள். உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளும் உங்களோடு போகலாம். ஆனால் உங்கள் ஆடுமாடுகள் மட்டும் நிற்கட்டும்.

**மோயீசன்:** அது எப்படி ஆகும்? சுளை இல்லாமல் தோல் எதற்கு? நாங்கள் எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு பலிகளையும், தகனப்பலிகளையும் படைக்கவேண்டும். படையல்களுக்கு வேண்டிய பலிப்பொருட்களாகிய மிருகங்களை எங்களுக்கு நீர் தரவேண்டும். எல்லா மந்தைகளும் எங்களோடு கூடவே வரும். அவற்றில் ஒரு குளம்பு முதலாய் பிறகாலே நிற்காது. அவை எங்கள் கடவுளாகிய ஆண்டவரின் ஆராதனைக்கு அவசியம். அன்றியும் நாங்கள் அவ்விடம் சேருமட்டும் இன்னதை பலியிடவேண்டும் என்று அறியோம்.

**பாரவோன்:** (கோபத்தோடு) நிறுத்து. எதையும் சகிப்பேன். இந்த வார்த்தைகளையுமா சகிப்பேன்? நீ போய்விடு. என்னை விட்டு அகன்று போ. இனி என் முகத்தில் விழிக்காதபடி எச்சரிக்கையாய் இரு. நீ என் கண்ணில் படும் நாளிலே சாவாய்.

**மோயீசன்:** நீர் சொன்னபடியே ஆகட்டும். இனி நான் உமது முகத்தைக் காண்பதில்லை.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – எட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: மக்கள் மன்றம்
பாத்திரங்கள்: மோயீசன், ஆரோன், மக்கள்

மோயீசன்: இஸ்ராயேல் மக்களே 'நள்ளிரவில் நாம் எகிப்து நாட்டைச் சந்திக்க வருவோம். அப்பொழுது அரியணையில் அமர்ந்திருக்கும் பாரவோனின் தலைச்சன் பிள்ளைகள் முதல் எந்திரக்கல்லை சுழற்றும் அடிமைப் பெண்ணின் தலைப்பிள்ளை வரையிலும், எகிப்து நாட்டிலிருக்கும் முதற்பேறு அனைத்தும், மிருகங்களின் தலையீற்று அனைத்துமே சாகும். இதனால் எகிப்து எங்கும் இதற்கு முன்னும் பின்னும் கேட்டிருக்க முடியாத பெரும் கூக்குரல் கேட்கும். ஆயினும், இஸ்ராயேல் மக்களாகிய அனைவரிடையேயும் மனிதன் முதல் மிருகங்கள் வரையும் யாரை நோக்கியும் ஒருநாய் முதலாய் குரைக்கமாட்டாது. இதுவே எகிப்தியருக்கும் உங்களுக்குமிடையே இருக்கப் போகும் வேறுபாடு என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். நம் கடவுளாகிய ஆண்டவருக்குக் கீழ்ப்படிபவர்கள் எல்லோரும் புறப்பட்டு போகும்படி பாரவோன் நம்மை விடுவான்' என்றுநம் கடவுளாகிய ஆண்டவர் சொல்லிய இந்த வார்த்தைகளை நான் பாரவோனிடம் சொன்னேன்.

மக்கள் 1: பாரவோன் என்ன சொன்னான்?

மோயீசன்: என்ன சொன்னானா? அவன் நமது மக்களைப் போக அனுமதி தர மறுத்துவிட்டான்.

மக்கள் 2: அப்படியாயின் இனி நாம் என்ன செய்யவேண்டும் என்று ஆண்டவர் சொல்கிறார்?

ஆரோன்: மக்களே கேளுங்கள்; நம் கடவுளாகிய ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைக்குச் செவி கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் 3: கூறுங்கள் எங்கள் கடவுளாகிய ஆண்டவர் கட்டளையிட்டவைகளைக் கூறுங்கள். நாங்கள் கேட்கிறோம்.

ஆரோன்: இம்மாதமே உங்களுக்கு மாதத்தின் தொடக்கம். இதுவே ஆண்டின் மாதங்களின் முதல் மாதமுமாகும். இம்மாதத்தின் பத்தாம் நாள் குடும்பத்திற்கும் வீட்டிற்குமாக ஒவ்வோர் ஆட்டுக் குட்டியைத் தேர்ந்தெடுங்கள்.

மோயீசன்: ஆனால் ஒருவன் வீட்டிலிருக்கிறவர்கள் ஆட்டுக் குட்டியை உண்பதற்குப் போதுமானவர்களாய் இராமற்போனால், அவன் அயல்வீட்டாரில் ஆட்டுக் குட்டியை உண்பதற்குத் தேவையான பேரை அழைத்துவரவேண்டும்.

ஆரோன்: ஆட்டுக்குட்டியோ மறுவற்றதும், ஆண்பாலானதும் ஒரு வயதுமாய் இருக்கவேண்டும்.

மோயீசன்: ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும், அந்த முறைப்படியே தெரிந்து கொள்ளுங்கள். அதனை இம்மாதத்தின் பதினான்காம் நாள்வரை வைத்திருந்து இஸ்ராயேல் மக்கள் ஒவ்வொரு கூட்டமும் அதனை அறுத்து, அதன் இரத்தத்தில் சிறிது எடுத்து, ஆட்டை உண்ணும் வீட்டு வாயில் நிலைக் கால் இரண்டிலும், நிலையின் மேல் சட்டத்திலும் தெளிக்க வேண்டும்.

மக்கள் 1: அப்படியே செய்வோம். . . ஆண்டவரின் திருவுளப் படியே ஆகட்டும்.

ஆரோன்: கேளுங்கள். பின் அன்று இரவிலே அடுப்பில் சுட்ட இறைச்சியை காட்டுக் கீரைகளோடும், புளியாத அப்பங்களோடும் உண்ணக் கடவீர்கள். பச்சையாயும், நீரில் அவிக்கப்பட்டதாயும் உள்ள இறைச்சியில் ஒன்றும் உண்ணாமல், அடுப்பில் பொரித்த கறியையே உண்ண வேண்டும்.

மக்கள்: ஆகட்டும். . ஆகட்டும். . .

மோயீசன்: இதையும் கேளுங்கள். . . ஆட்டின் தலை, கால், குடல், முதலியவற்றையும் உண்பீர்களாக. அதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் விடியற்காலைவரையும் வைக்கவேண்டாம். ஏதும் மிஞ்சியிருந்தால் அதை நெருப்பில் சுட்டெரிக்கக் கடவீர்கள்.

ஆரோன்: அதனை உண்ண வேண்டிய முறையையும் கேளுங்கள். அதாவது நீங்கள் இடுப்பிலே கச்சை கட்டிக் காலிலே செருப்பு அணிந்திருக்கவேண்டும். கையிலே கோலைப்பிடித்தவர்களாய் அதனை விரைந்து உண்ண வேண்டும். ஏனென்றால் அது ஆண்டவருடைய பாஸ்கா...

மக்கள்: ஆண்டவருடைய பாஸ்கா என்றால் என்ன?

ஆரோன்: அது ஆண்டவருடைய கடத்தல். உண்மையில் அந்த இரவில் ஆண்டவர் எகிப்து நாடெங்கும் கடந்து போய் எகிப்திலுள்ள மனிதர் முதல் விலங்கு வரை தலைப்பேறானவை எல்லாம் கொன்று எகிப்திய தேவதைகளின் மீது நீதியைச் செலுத்துவார்.

மக்கள்: நமது கடவுளாகிய ஆண்டவர் போற்றப்படுவாராக.

மோயீசன்: "நாமே ஆண்டவர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். அந்த இரத்தத்தைக் காணவே உங்களை நாம் கடந்துபோவோம். இவ்வாறு எகிப்து நாட்டை நாம் தண்டிக்கும் போது கொள்ளை நோய் உங்கள் மேல் வந்து அழிக்காதிருக்கும். நீங்களோ அந்த நாளை நினைவு கூர வேண்டிய நாளாகக் கொண்டு, அதை உங்கள் தலைமுறை தோறும் ஆண்டவருடைய பெருவிழா என்று எக்காலமும் கொண்டாடி வரக்கடவீர்கள்" என்று நம் கடவுளாகிய ஆண்டவர் சொல்கிறார்.

மக்கள்: ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக! ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக!

ஆரோன்: இதையும் கேளுங்கள். புளியாத அப்பங்களை ஏழுநாள்வரை உண்ணவேண்டும்.

மோயீசன்: முதல் நாளில் புளித்த மாவு வீட்டில் இருக்ககூடாது. முதல் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரை புளித்த அப்பம் உண்பவன் இஸ்ராயேல் சமூகத்தினின்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கப்படுவான். முதல்நாள் பரிசுத்த நாளும், சிறப்பாய்க் கொண்டாட வேண்டிய நாளுமாகும். ஏழாம் நாளும் அதுபோலவே வணக்கத்திற்குரிய நாளுமாயிருக்கும். அவற்றில் வேலை ஒன்றும் செய்யலாகாது. நீங்கள் உண்பதற்கு தேவையான வேலையை மட்டும் செய்யலாம். இவ்விதம் புளியாத அப்பத்தின் அந்தத் திருவிழாவைக் கொண்டாடுவீர்களாக.

ஆரோன்: ஏனென்றால், அந்த நாளிலே நாம் உங்கள் படையை எகிப்து நாட்டினின்றும் புறப்படச்செய்வோம் என்று ஆண்டவர் சொல்கிறார்.

மக்கள்: வாழ்க! வாழ்க! ஆண்டவரின் திருப்பெயர் வாழ்க!

மோயீசன்: நீங்களும் உங்கள் தலைமுறைதோறும், என்றென்றும், அந்த நாளைக் கொண்டாடக் கடவீர்கள். அதாவது முதல் மாதத்தின் பதின்நான்காம் நாள் மாலை முதல் இம்மாதத்தின் இருபத்தோராம் நாள் மாலை வரை புளியாதஅப்பத்தை உண்பீர்கள். ஏழுநாள் வரை புளிப்பு உங்கள் வீடுகளில் இல்லாதிருக்கக் கடவது.

ஆரோன்: அந்நியரிலாவது, குடிமக்களிலாவது எவனேனும் புளிப்புள்ளதை உண்பானேல் அவன் இஸ்ராயேல் சமூகத்தினின்றும் விலக்குண்டுபோவான். நீங்கள் புளிப்புள்ள யாதொன்றையும் உண்ணாமல் புளியாத அப்பத்தை மட்டும் உண்பீர்கள்.

மோயீசன்: நீங்கள் ஒவ்வொருவரும் போய், உங்கள் குடும்பத்திற்கு ஏற்றாற் போல் ஒவ்வொரு ஆட்டுக் குட்டியைத் தெரிந்தெடுத்து பாஸ்காவைப்பலியிடுங்கள்.

ஆரோன்: பின் ஈசாப்புக் கொழுந்துக்கொத்து எடுத்து வந்து அதைக் கிண்ணத்திலுள்ள இரத்தத்தில் தோய்த்து வாயில் நிலைக்கால்களின் மேல்சட்டத்திலும், நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்.

மோயீசன்: எச்சரிக்கையாய் இருங்கள். விடியற்காலம் வரை உங்களில் ஒருவரும் வீட்டு வாயிலைக் கடக்கக்கூடாது. ஏனென்றால் ஆண்டவர் எகிப்தியரை அழிப்பதற்குக் கடந்துவரும்போது கதவு நிலைகளிலுள்ள இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த அடையாளங்களைக் கண்டு உங்களை அழிக்காமல் வாயில் படியை விலகிக் கடந்து போவார்.

மக்கள்: (மக்கள் முகங்குப்புற விழுந்து) ஆண்டவரின் திருவுளப்படியே ஆகட்டும். சேனைகளின் தேவனாகிய ஆண்டவர் போற்றப்படுவாராக.

திரை

3451 CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: பாரவோன் அரண்மனை.

பாத்திரங்கள்: பாரவோன், அமைச்சர், காவலாளி, மோயீசன், ஆரோன்.

நள்ளிரவு. வானை அசைக்கும் எகிப்திய மக்களின் அவல ஓலம். அச்சுறுத்தும் பேரிரைச்சல். பின்னணி ஒலி—ஒளியினால் இதைக் காட்டலாம். அச்சமுற்ற பாரவோன்.

பாரவோன்: *அமைச்சரே! எகிப்து நாடே வாய் திறந்து அழுகிறதா? அச்சம் என் இதயத்தை அடித்து நொறுக்கிவிட்டது. எங்கும் மரண ஓலம். . . அந்த எபிரேயக் கடவுளின் கருணையற்ற கரங்களா எமது வீடுகளில் இரத்த வெள்ளத்தைப் பாய வைத்தது? என்ன இருந்தாலும் நான் ஒருவனே உயிர் பிழைக்க நேரிடினும் இந்த எபிரேயக் கடவுளுக்கு நான் அடிபணியப் போவதில்லை.*

அமைச்சர்: *முடிவேந்தரே! தாங்கள் அஞ்சா நெஞ்சர் என்பதை அகிலமும் அறியுமே. ஆனால் அஞ்சாமையை, வீரத்தை மட்டும் சொத்தாக வைத்துக்கொண்டு எதையும் சாதித்து விடமுடியாது. விவேகமும் வேண்டும். வீரத்தால் வெல்லமுடியாததை, விவேகத்தால் வெல்ல வேண்டும். வீரமும் விவேகமும் இரண்டறக் கலக்கும் போதுதான் கருமம் கைகூடும். எதற்கும் இம்முறையும் அந்த எபிரேயத் தலைவர்களை அழைத்து அவர்களை எகிப்தைவிட்டு போகும்படி அனுமதி கொடும். அப்புறம் ஆகவேண்டியதைக் கவனிப்போம்.*

பாரவோன்: *(யோசித்துவிட்டு) அதுவும் நல்லதுதான்... யாரங்கே?*

காவலாளி: *(வணங்கி) அரசே!*

பாரவோன்: *அந்த எபிரேய மனிதர்களை அழைத்து வா.*

காவலாளி: *(வணங்கி) ஆகட்டும் அரசே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலாளி போனபின்

அமைச்சர்: மன்னவரே! எதற்கும் அடக்கமாக இருக்கவேண்டும். அவரசப்பட்டு, ஆத்திரப்பட்டு, கருமத்தை சிதறடிக்காமல் பார்த்து கொள்ளவேண்டும்.

அப்பொழுது காவலாளி மோயீசனையும், ஆரோனையும், அழைத்து வருதல்.

பாரவோன்: என்ன கருமம் செய்தீர்கள்? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்துவிட்டீர்களே! இரத்தத்தைக் கொன்ற இந்த கொலைப் பாதக இனம் இனியும் இந்த நாட்டில் இருக்ககூடாது. போங்கள், போய்விடுங்கள், நீங்களும் உங்கள் இஸ்ராயேல் மக்கள் எழுந்து என் மக்களை விட்டுப் புறப்பட்டுப் போங்கள். உங்கள் கடவுளுக்குப் பலி செலுத்துங்கள். நீங்கள் கேட்டபடி உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு வளம் நிறைந்த நிலத்திலே இற்றைநாள் வாழ்ந்த நன்றிக் கடனுக்காகவாவது என்னையும் ஆசீர்வதியுங்கள். . . போங்கள் போய்விடுங்கள். . .

மோயீசன்: ஆகட்டும் மன்னவனே. . . ஆகட்டும்.

அவர்கள் போன பின் பாரவோன் சிந்தித்தபடியே அங்குமிங்கும் நடத்தல்

பாரவோன்: அமைச்சரே! எபிரேயர்களை அடிமைகளாக வைத்து எப்படியெல்லாம் உழைப்பித்தோம். கோட்டைக் கொத்தளங்களைக் கட்டினோம். நாட்டிலே செல்வம் பொழியச் செய்தோம். இப்போது நாடே வரண்டு விட்டது போன்ற ஒரு வெறுமை என் நெஞ்சை உதைக்கிறது. என்ன செய்யலாம். சீக்கிரம் சொல்லும்

அமைச்சர்: அரசே! நாம் இனிமேல் தான் விழிப்பாக இருக்கவேண்டும். எங்கள் ஒற்றர்களை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாலே அவர்கள் நிழல்போல் அனுப்பவேண்டும். அவர்கள் எந்த வழியால் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாரவோன்: அதுவும் சரிதான்... ஆனால் ஒன்று அந்த இஸ்ராயேலர்கள் பிலிஸ்தியரின் நாட்டினூடாகப் போகமுடியாது. ஏனெனில் பிலிஸ்தியர் அவர்களை நாட்டைகடந்து போகவிடமாட்டார்கள் என்று தோன்றுகிறது. அதையும் மீறி அவர்கள் பிலிஸ்தியரின் நாட்டின் வழியாக போக முற்பட்டால் பிலிஸ்தியர்களுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையில் கடும் போர் மூளும். இஸ்ராயேலியர்கள் இப்போது இருக்கும் நிலையில் போருக்குத் தயாராக மாட்டார்கள்.

அமைச்சர்: சரியாகச் சொன்னீர்கள். அவர்கள் இங்கிருந்து செங்கோட்டுக்கு போகக் கூடும். ஆனாலும் பாலைவனம் வழியாகப்போக முடியாது ஆதலால் வேறு மார்க்கமாகத் தான் போக வேண்டியிருக்கும்.

பாரவோன்: அப்படியாயின் அவர்கள் கடலோரத்திற்குத் தான் சென்றடைய வேண்டியிருக்கும். . . எதற்கும் எமது ஒற்றர்கள் மூலம் உடனுக்குடன் செய்தி. . . அறிந்து கொண்டால் அவர்களை மடக்கலாம்.

அமைச்சர்: நல்லது. . . அப்படியே செய்வோம்.

பாரவோன்: அமைச்சரே! தளபதிகளை அழைத்து, தேர்ப்படை, குதிரைப்படை, காலாற்படை இவைகளில் தரமானவைகளைத் தெரிந்து சிறந்த போர்வீரர்களையும் வேண்டிய உணவு தண்ணீர் தட்டுமுட்டுச் சாமான்களையும் ஆயத்தமாக்கச் சொல்லும். எமது ஒற்றர்களின் செய்தி கிடைத்ததும், வில்லிலிருந்து அம்பு புறப்பட்டதுபோல் புறப்படுவோம்... அந்த எபிரேயர்களை கலங்கவைத்து அவர்களை அடிமை கொள்வோம். வெற்றி நமதே.

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி — பத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்: கடலோரம்
பாத்திரங்கள்: மோயீசன், ஆரோன், மக்கள், உரைஞன்1, உரைஞன் 2.

நடிகர்கள் மேடையின் ஒருகரையில் நிற்க.
உரைஞர்கள் மேடைக்கு வருதல்.

உரைஞன் 1: எகிப்தில் வீசிய சோகப்புயலில் சுருண்டு போன பூண்டுகளாய் கதியிழந்து கண்ணீர் வடித்த இஸ்ராயேலர்களை கட்டி அணைத்து, தட்டி கொடுக்கும் ஒரு தகப்பன் போல் இஸ்ராயேலர்களின் கடவுளாகிய ஆண்டவர் செங்கடல் வரைக்கும் நடத்தி வந்தார்.

உரைஞன் 2: சொக்கோடு என்னும் இடத்திலிருந்து புறப்பட்டு பாலைநிலத்தின் ஓரமாய் நடந்து, ஏத்தாம் என்னும் இடத்தில் தங்கிய இஸ்ராயேலர்களுக்கு கடவுள் பகலில் மேகத்தூண் போலவும், இரவில் நெருப்புத்தூண் போலவும் தோன்றி, அவர்களுக்கு முன் சென்று வழித்துணையாக இருந்தார்.

உரைஞன் 1: கருணையைக் கொன்று அகந்தையில் நிமிர்ந்து வணங்காக் கழுத்தோன் பாரவோன் மன்னன் தன் வினை தன்னைச் சுடும் விதி மறந்து ஒற்றர் மூலம் பெற்ற செய்தியில் இஸ்ராயேல் மக்களை வதைக்கும் பொருட்டு, படைபலங்கொண்டு கடல்கரை நோக்கி காற்றென விரைந்தான்.

உரைஞன் 2: தம்மை நோக்கி வரும் படை கண்டு, பெரும் பயங்கொண்டு, வன்துயர் உற்றுக் கடவுளை நோக்கிக் கூக்குரலிட்டனர்.

உரைஞர்கள் விலகுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் 1: அதோ! அதோ! பாரவோன் படை. ஐயோ ஆண்டவரே மடிந்தோம்.

**மக்கள் மத்தியில் அச்சப்பரப்பு**

மக்கள் 2: (கோபமாகவும், சோகமாகவும்) எம் தலைவராகிய மோயீசரே! எகிப்தில் கல்லறைகள் இல்லாதிருந்ததினாலோ நீர் பாலைவனத்திலே சாகும்படி எங்களை கூட்டி வந்தீர்? என்ன செய்யக் கருதி எங்களை எகிப்தினின்று புறப்படச்செய்தீர்? நாங்கள் எகிப்திலே உனக்குச் சொன்ன சொல் இதுவே அன்றோ? எகிப்திலே வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுப்போம் என்று சொன்னோம் அல்லவா? பாலைவனத்தில் சாவதைக்காட்டிலும் அவர்களுக்கு வேலை செய்வது எங்களுக்கு நலமாக இருக்குமே.

மோயீசன்: அஞ்ச வேண்டாம். நீங்கள் நின்று கொண்டே இன்று ஆண்டவர் செய்யப் போகிற மகத்துவத்தை பாருங்கள். உண்மையிலே நீங்கள் இப்போது காண்கிற இந்த எகிப்தியரை இனி எந்தக் காலத்திலுமே காணப் போவதில்லை. ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார். நீங்கள் பேசாதிருங்கள்.

**மேடையில் நிற்பவர்கள் எல்லோரும் அசையா நிலையில் நிற்க கடவுள் பேசுகிறார்.**

கடவுள்குரல்: மோயீசா! மோயீசா!!

மோயீசன்: ஆண்டவரே! இதோ உமது அடியேன்.

கடவுள்குரல்: நீ நம்மிடம் முறையிடுகிறதென்ன? இஸ்ராயேல் மக்களைப் புறப்பட்டு போகச்சொல். நீயோ உன் கோலை ஓங்கி உன் கையைக் கடலின் மேல் நீட்டிக் கடலைப் பிரித்துவிடு. இஸ்ராயேல் மக்கள் அதன் நடுவிலே கால் நனையாமல் நடந்து போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப் பின் தொடரும்படி நாம் எகிப்தியரின் மனதைக் கடினப்படுத்துவோம். அதனால் பாரவோனாலும் அவனது தேர் குதிரைகளினாலும் நாம் மாட்சிஅடைவோம். இப்படி நாம் பாரவோனாலும், அவனது தேர்களினாலும் மாட்சி அடையும் போது ஆண்டவர் நாமே என்று எகிப்தியர் அறிந்து கொள்வார்கள்.

மோயிசன் அசையா நிலையில் நிற்க எகிப்தியரின் படை மறுகரையில் நிற்றல். இரண்டு படைகளுக்கும் இடையில் நின்று உரைஞர்கள் பேசுதல்.

உரைஞன் 1: பாளையத்தின் முன் சுவடுகள் புதைத்து, முன் நடந்த கடவுளின்தூதர் பெயர்ந்து அவர்களுக்கு பின் நடந்தான். அவரோடு தானே மேகத்தூணும் மெல்ல விலகி அவர்கள் பின்னால் காணப்பட்டது.

உரைஞன் 2: அந்த மேகம் எகிப்தியர் படைக்கும் இஸ்ராயேலரின் படைக்குமிடையில் நின்றது. இருளின் வடிவில் நின்ற அம்மேகம் இரவில் ஒளியைப் பாய்ச்சி நின்றதால் இஸ்ராயேல் படையும் எகிப்தியர் படையும் இரவு முழுவதும் ஒன்றோடு சேர்ந்து மோத முடியவில்லை.

மேடையில் உரைஞர்கள் உட்பட எல்லோரும் அசையா நிலையில் நிற்க மோயிசன் மட்டும் கடலில் மீது கையை நீட்டுதல். பின் அசையா நிலை. அதன் பின் உரைஞர்கள் பேசுதல்.

உரைஞன் 1: மோயிசன் கடலின் மேல் கையை நீட்டினார். நீட்டவே ஆண்டவர் இரவு முழுவதும் மிகக் கொடிய வெப்பக்காற்றை வீசத்தொடங்கினார். கடலை வாரி கட்டாந்தரையாய் மாற்றிவிட்டார்.

உரைஞன் 2: இஸ்ராயேல் மக்கள் வரண்டு கிடந்த கடலின் நடுவே அடிகள் புதைத்து விரைந்து நடந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105168

உரைஞன் 1: நடந்து செல்லும் மக்களுக்கு வலப்புறத்திலும், இடப்புறத்திலும் கடல் நீர் எழுந்து மதில்போல் நின்றது.

உரைஞன் 2: தொடர்ந்து வந்த எகிப்தியர் படையும் பாரவோனின் தேர்களோடு, குதிரை வீரரும் அவர்கள் பின்னால் கடலின் நடுவே விரைந்து புகுந்தனர்.

இக்காட்சியின் போது நடுமேடையில் உரைஞர்கள் அசையா நிலையில் நிற்க அவர்களுக்குப் பின்புறமாக எகிப்தியர் படைகள் தேர்கள், போவதுபோல் பாவனை செய்து செய்து செல்ல இஸ்ராயேல் மக்கள் மேடையை விட்டு வெளியே செல்லுதல், அதைத் தொடர்ந்து செல்லும் எகிப்தியப் படை மேடையின் கரையில்விழுந்து மடிந்து போவதுபோல் பாவனை செய்தல் இந்த நிகழ்வுகளை அபிநயங்கள் ஒலி, ஒளிமூலம் நிகழ்த்திக் காட்டலாம். அப்போது உரைஞர்கள், எகிப்தியர்கள் பேசுதல்.

உரைஞன் 1: காலை நேரம் கடற்கரை ஓரம் நெருப்புப்பிழம்பை கக்குகின்ற மேகத்தூணுள் இருந்து கடவுள் எகிப்தியரின் படை மேல் இலக்கு வைத்தார்.

உரைஞன் 2: தேர்க்கள் சரிந்தன. குதிரைகள் வீழ்ந்தன. படைகள் மூழ்கின.

எகிப்தியர்: ஐயகோ அழிந்தோம். அழிந்தோம். வாருங்கள் இஸ்ராயேலை விட்டு ஓடிப்போவோம். இதோ இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் அவர்கள் சார்பாக போராடுகிறார். . .

அவனும் நீருள் மூழ்குவது போல் பாவனை செய்தல். பின் உரைஞர்கள் அசைந்து பேசுதல்.

உரைஞர் 1: மோயீசனைப் பார்த்து கடவுள் கடலின் மீது கையை நீட்டு என்று பணித்தார். அப்போது மதில் போல் நின்ற கடல் நீர் திரும்பி எகிப்தியர் மேலும் படைகள் மேலும் வந்து விழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைஞன் 2: எகிப்தியர் படையினர் யாவரும் கடலினுள் அழிந்தனர் இஸ்ராயேல் மக்களோ, வாழ்வு பெற்றனர் விடுதலை அடைந்தனர்.

உரைஞன் 1: இஸ்ராயேல் மக்களின் அருந்தவப் புதல்வன் ஆண்டவன் அடியான், மோயீசன் தனது மக்களோடு கருணைமழை பொழிந்து எகிப்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றிய தங்கள் அன்புக் கடவுளுக்கு நன்றிக்கீதம் பாடி வருவதை நலமுடன் சேளும்.

**உரைஞர்கள் போக மோயீசனும் மேடையின் மறுகரையில் இருந்து மேடைக்கு வருதல்**

மோயீசன்: பாட்டொன்று பாடுவோம் இறைவனுக்கு
புகழோடு வெற்றியில் சிறந்தவர்க்கு
பரிபடை தனைக்கடலில் வீழ்த்தினார்
போற்றுதற் குரியரென்றும் வாழீ! வாழீ!

மீட்பை எனக்கு அளித்தவர் போற்றி
எனது கடவுள் அவரே போற்றி
மேன்மை அவருறப் போற்றுவேன்
எந்தையர் கடவுளைப் போற்றுவேன்

வல்லபர் வீரனைப் போன்றவர் போற்றி
பாரவோன் படைகளைக் கடலிலே வீழ்த்தினார்.
தேர்களைப் பரிகளை வீழ்த்தியே ஓங்கினார்
பகைவரை வீழ்த்திய புயத்தோன் வாழ்க

தருக்குடன் சூழுரைத்தே படை
நடத்தியே உம்முடை மக்களை
மாய்த்திட எழுந்த பார வோன்படை
ஈயக்குண்டினை ப்போலவே ஆழியில்
வீழ்த்திய ஒப்புமை யற்ற அற்புதர் வாழீ!

பிலிஸ்தியர் ஏதோமயர் நொந்து கலங்கினர்
மோவாப் வீரரும் கலக்கம் உற்றனர்
கானான் நாட்டினர் திகிலில் வதங்கினர்
உமது பலத்தால் உமது மக்கள்
செங்கடல் கடக்கச் செய்தோய் வாழீ!

**முற்றும்**

3451C



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளியீடு
CENTRE FOR PERFORMING ARTS
திருமறைக்கலாமன்றம்

89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY: LANKA PUBLISHING HOUSE. COLOMBO